சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

அ.சா.1 தினகரன், த/பெ. கிருஷ்ணன், வயது.30

சாட்சி ஆஜராகி குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .**</u>

14.09.2019 அன்று திருப்பத்தூர் வங்கி மேலாளர் தான் என்னிடம் கடிதம் வழங்கினார். ஒவ்வொரு வங்கிக்கும் ரூ.10000/-க்கு வரைவோலை கொடுத்தார்கள். அன்றைய தேதிக்கு ஜோலர்பேட்டை, குரிசிலப்பட்டு, விசமங்கலம், சுந்திரம்பள்ளி ஆகிய கிளைக்கு அறிவிப்பு அனுப்பட்டது. முதலில் எங்களிடம் அனுமதி கடிதம் வழங்குவார்கள், அதன் பிறகு ரூ.10000/-க்கான வரைவோலை கொடுத்தபின் தேதி குறிப்பிட்டு அறிவிப்பு அனுப்புவோம். ஒவ்வொரு வங்கிக்கும் எத்தனை அறிவிப்புகள் அனுப்பினோம் என்று எனக்கு தெரியவில்லை. வரிசை எண் 61 என்று குறிப்பிட்டு குரிசிலப்பட்டு வங்கிக்கு அறிவிப்பு அனுப்பியது போல எத்தனை அறிவிப்பு அனுப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. ஜோதிபாசு என்ற வாடிக்கையாளருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றும், ஆனால் அவர் யார் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாங்கள் அனுப்பும் அறிவிப்பில் வங்கி மேலாளரின் கையொப்பம் பெறமாட்டோம் என்றால் சரிதான். குரிசிலப்பட்டை சேர்ந்த வங்கி மேலாளர் மக்கள் நீதிமன்றம் நடத்த வேண்டும் என்று தனிப்பட்ட முறையில் வங்கி கணக்கு வழக்கு குறித்து என்னை சந்தித்தாரா என்றால் இல்லை. வங்கியில் பீல்டு ஆபிசர் மற்றும் கிளர்க்குகள்தான் என்னிடம் வந்து கையொப்பம் பெற்று செல்வார்கள் என்றால் சரிதான். அதேபோல்அறிவிப்பும் மேற்படி பீல்டு ஆபிசர் மற்றும் க்ளர்க்குகள் தான் டைப் செய்து கொண்டுவந்து முத்திரை பதித்து என்னிடம் கையொப்பம் பெற்று செல்வார்கள் என்றால் சரிதான். என்னிடம் கையொப்பம் வாங்கி சென்று வங்கி அலுவலர்களை வைத்து நோட்டிசை நேரடியாக வாடிக்கையாளரிடம் சார்வு செய்யும் பழக்கமும் இருந்தது என்றால் சரிதான். 05.07.2019 அன்று தான் எதிரி குரிசிலப்பட்டு வங்கி கிளைக்கு பணி மாறுதல் ஆகி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. பணி மாறுதல் ஆகி 3 மாதங்கள் தான் ஆன காரணத்தினால் அவருக்கு மக்கள் நீதிமன்றம் குறித்து தெரிய வாய்ப்பில்லை என்றால்

எனக்கு அது பற்றி தெரியாது என்றால் சரிதான். வழக்கு அறிவிப்பை மட்டும் எதிரி கையொப்பம் செய்து அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் புகார் கொடுத்திருந்தால் பீல்டு ஆபிசர் மீது தான் கொடுத்திருக்கவேண்டும் என்றும், மேலாளர் ஆன எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. வழக்கின் அறிவிப்பை குறித்து மேலாளரை அழைத்து விசாரித்தோமா என்றால் இல்லை. பீல்டு ஆபிசர் என்று தெரிந்துக்கொண்டு அவர் மேல் புகால் கொடுக்காமல் மேலாளர் மீது புகார் கொடுத்தது தவறு என்றால் சரியல்ல. ஜோதிபாசு என்பவருக்கு நோட்டிஸ் சார்வு செய்திருந்தால் அவர் அன்று மக்கள் நீதிமன்றத்திற்கு வந்திருப்பார் என்றால் அவர் அன்று மக்கள் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்பது மட்டும் எனக்கு தெரியும். மேற்படி ஜோதிபாசு வங்கியை அனுகி அவருடைய கடனை திருப்பி செலுத்தி கணக்கு முடித்துக்கொண்டார் என்றால் எனக்கு தெரியாது. ஸ்கேன் செய்துகையொப்பம் செய்திருந்தால் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்க வேண்டும் என்றும் கிரிமினல் வழக்கு தொடர முடியாது என்றால் சரியல்ல. எனக்கு வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றும் எனது மேலதிகாரி வழக்கு தொடர சொன்னதால் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. பீல்டு ஆபிசர் சண்முகம் என்பவர் யார் என்று தெரிந்துக்கொண்டே வழக்கற்கு சம்மந்தம் இல்லாத எதிரி மீது தவறாக புகார் கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of witness.